**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்: 613** **நாள்: 25.10.2026**

**வடகிழக்குப் பருவமழைக் காலம் - பொதுமக்கள்கடைப்பிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

**மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் மழைநீர் தேங்குதல், வெள்ளப்பெருக்கு மற்றும் சுற்றுப்புறச் சுகாதாரப் பாதிப்புகள் காரணமாக டெங்கு, எலிக்காய்ச்சல், வயிற்றுப்போக்கு உள்ளிட்ட தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது.

பொதுமக்கள் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் பாதுகாத்துக் கொள்ளப் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

**பாதுகாப்பான குடிநீரைப் பயன்படுத்துதல்**

- நன்கு கொதிக்கவைத்து ஆறவைத்த குடிநீரையோ, பாதுகாப்பான குடிநீர் ஆதாரங்களிலிருந்து பெறப்படும் நீரையோ மட்டுமே பருக வேண்டும்.
- குடிநீரைச் சுத்தமான, மூடியுள்ள பாத்திரங்களில் சேமிக்க வேண்டும்.
- கழிவுநீர் அல்லது வெள்ளநீரால் மாசடைந்திருக்கக்கூடிய நீரைப் பருகக் கூடாது.
- குடிநீர் மாசடைந்துள்ளதாகச் சந்தேகம் ஏற்பட்டால், சென்னை குடிநீர் வாரியம் / பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தகவல் தெரிவித்து, அலுவலர்கள் வழங்கும் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.

**வயிற்றுப்போக்கு மற்றும் நீர்வழித் தொற்றுகளைத் தடுக்க**

- உணவு உண்பதற்கு முன்பும், உணவு தயாரிப்பதற்கு முன்பும், கழிப்பறையைப் பயன்படுத்திய பின்னரும் சோப்பினால் கைகளைக் கழுவ வேண்டும்.
- நன்கு சமைத்த, புதிதாகத் தயாரிக்கப்பட்ட உணவுகளை மட்டுமே உட்கொள்ள வேண்டும்.
- திறந்தவெளியில் வைக்கப்பட்ட உணவுகள், பழைய உணவுகள் மற்றும் வெள்ளநீரால் பாதிக்கப்பட்ட உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.
- பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பாதுகாப்பான நீரில் நன்கு கழுவ வேண்டும்.

- வயிற்றுப்போக்கு ஏற்பட்டால் உடனடியாக ஓ.ஆர்.எஸ். (ORS) கரைசலைப் பருக வேண்டும். குழந்தைகளுக்குத் தாய்ப்பால் மற்றும் வழக்கமான உணவுகளைத் தொடர்ந்து வழங்க வேண்டும்.
- மலத்தில் இரத்தம் காணப்படுதல், தொடர்ந்து வாந்தி, சிறுநீர் குறைதல், அதிகச் சோர்வு அல்லது நீரிழப்பு அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவமனையை அணுக வேண்டும்.
- மருத்துவரின் ஆலோசனையின்றி நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை உட்கொள்ளக் கூடாது

**டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களைத் தடுக்க**

- வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் உள்ள பழைய டயர்கள், தேங்காய் ஓடுகள், பூந்தொட்டிகள், தண்ணீர்த் தொட்டிகள் உள்ளிட்டவற்றில் நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- தண்ணீர் சேமிக்கும் பாத்திரங்களை வாரம் ஒருமுறை சுத்தம் செய்து, மூடி வைத்திருக்க வேண்டும்.
- கொசுக்கடியிலிருந்து பாதுகாத்துக்கொள்ள கொசு விரட்டிகளைப் பயன்படுத்துவதுடன், முழுக்கை ஆடைகளை அணிய வேண்டும்.
- காய்ச்சல், கடுமையான தலைவலி, உடல் வலி, தோலில் தடிப்புகள் அல்லது தொடர்ந்து வாந்தி போன்ற அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவமனையை அணுக வேண்டும்.
- மருத்துவரின் ஆலோசனையின்றி மருந்துகளை உட்கொள்ளக் கூடாது.

**எலிக்காய்ச்சலைத் தடுக்க**

- வெள்ளநீர் மற்றும் தேங்கிய மழைநீரில் நடப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- தவிர்க்க இயலாத சூழலில், பாதுகாப்பான காலணிகளை அணிய வேண்டும். உடலில் உள்ள காயங்களை நீர் புகாத வகையில் மூடிப் பாதுகாக்க வேண்டும்.
- வெள்ளநீரில் தொடர்பு ஏற்பட்டால், சோப்பு மற்றும் சுத்தமான நீரைக் கொண்டு உடலை நன்கு கழுவ வேண்டும்.
- வெள்ளநீரில் நடமாடிய பின்னர் காய்ச்சல், கடுமையான தசைவலி, தலைவலி, கண்கள் சிவத்தல் அல்லது சிறுநீர் குறைதல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி, வெள்ளநீரில் தொடர்பு ஏற்பட்டதைத் தெரிவிக்க வேண்டும்.
- மருத்துவரின் ஆலோசனையின்றி நோய்த்தடுப்பு நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை உட்கொள்ளக் கூடாது.

**வெள்ளப்பெருக்கு காலத்தில் பொதுவான முன்னெச்சரிக்கைகள்**

- கழிவுநீர், மாசடைந்த நீர் மற்றும் குப்பைகளுடன் நேரடித் தொடர்பைத் தவிர்க்க வேண்டும்.
- வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களைத் தூய்மையாக வைத்துப் பாதுகாப்பான முறையில் குப்பைகளை அகற்ற வேண்டும்.
- வெள்ளநீரில் தொடர்பு ஏற்பட்ட பின்னர் காய்ச்சல் அல்லது பிற அறிகுறிகள் தோன்றினால் அலட்சியம் செய்யாமல் உடனடியாக மருத்துவ உதவி பெற வேண்டும்.
- வெள்ளநீர் சூழ்ந்த பகுதிகளில் மின்கம்பிகள் மற்றும் மின்சாதனங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்

**மேலும் உதவிக்கு அருகிலுள்ள மாநகர ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது அரசு மருத்துவமனையை அணுகவும்.**

பெருநகர சென்னை மநகராட்சி, உதவி எண் : 1913 எண்ணிற்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**